சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

# Case No. OS. 40/2019

2023ம் ஆண்டு நவம்பர் மாதம் 01ம் நாள் புதன்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய **வா.சா.1**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திரு.வி.ரவிசந்தின், தலைமைஎழுத்தர் என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கேசவன் | தொழில் | |
| தந்தை பெயர் | குமார் | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

**01.11.2023** முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 29.01.2018 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 1,** 19.10.2018 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.2,** 1ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.3,** 5ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.4,** 6ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.5,** 2ம் பிரதிவாதியின் திருப்பப்பட்ட அஞ்சலக உறை **வா.சா.ஆ.6,** 4ம் பிரதிவாதியின் திருப்பப்பட்ட அஞ்சலக உறை **வா.சா.ஆ.7**, மின் கட்டண அட்டைகள் நான்கு அவைகள் **வா.சா.ஆ.8, வா.சா.ஆ.9, வா.சா.ஆ.10** மற்றும் **வா.சா.ஆ.11,** தாக்கல் செய்கிறேன். வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பு பிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.